விரைவில் திருமணம் நடக்க ஸ்ரீ சுயம்வரா பார்வதீ மந்திரம்

ஓம் ஹ்ரீம் யோகினி யோகினி யோகேஸ்வரி யோக பயங்கரி
ஸகல ஸ்தாவர ஜங்கமஸ்ய முகஹ்ருதயம் மமவசமாகர்ஷய
ஆகர்ஷய ஸ்வாஹா ||

இந்த மந்திரத்தை தினசரி 28 முறை பாராயணம் செய்தால் மிக விரைவில் திருமணம் நடத்தப்பெறுவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஆஞ்சநேயர் பரிபூரண கடாக்ஷம் பெற :

ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் மாலா மந்த்ரம்

**ஓம் ராமதூதாய ஆஞ்சநேயாய வாயு புத்ராய மஹா பலாய
ஸீதா துக்க நிவாரணாய, லங்கா விதாஹகாய
மஹா பலப்ரசண்டாய பல்குணஸகாய
கோலாஹல ஸகல ப்ரஹ்மாண்ட பாலகாய
ஸப்த ஸமுத்ர நிராலங்கிதாய,
பிங்கள நயனாய அமித விக்ரமாய
ஸுர்ய பிம்ப பலஸேவகாய, துஷ்ட நிராலம்பக்ருதாய
ஸஞ்ஜீவினி ஸமாநயந ஸமார்த்தாய அங்கத லக்ஷ்மண
கபி ஸைந்ய ப்ராண நிர்வாஹகாய
தஸகண்ட வித்வம் ஸனாய ராமேஷ்டாய பல்குநஸகாய
ஸீதா ஸஹித ராமச்சந்த்ர ப்ரர்ஸதகாய ஷட் ப்ரயோகாங்க
பஞ்ச முகி ஹனுமதே நம :**

இந்த மந்திரத்தை தினசரி 5 முறை பாராயணம் செய்து ஆஞ்சநேயரை வழிபட்டால் ஆஞ்சநேயர் அருளால் கிரகபீடை, துஷ்ட தேவதைகளால் வரும் பீடைகள், கெட்ட சொப்பன பலன்கள் நீங்கப்பெற்று மனோ தைரியம் மற்றும் கீர்த்தியுடன் நீண்ட ஆயுளைப்பெறுவார்கள்.

பிறவிக் கடன் தீர்க்கும் ஸ்ரீ நரசிம்ம மஹா மந்திரம்

**ஓம் உக்ரம் வீரம் மஹா விஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம்
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும் ம்ருத்யும் நமாம்யஹம் ||**

இந்த மந்திரத்தை தினசரி 27 முறை பாராயணம் செய்து ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரை வழிபட்டால் பிறவிக்கடன் தீர்ந்து எம்பெருமானின் திருப்பாதங்களைப் பற்றுவார்கள்.

யம பயம் போக்கும் மஹா ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம்

**த்ரியம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்த்தனான் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத் ||**

இந்த மந்திரத்தை தினசரி காலை 16 முறை பாராயணம் செய்தால் சிவபெருமான் அருளுடன் மார்க்கண்டேயரைப்போல் சிரஞ்சீவியாக இருக்கலாம்.

மேற்கண்ட அனைத்து மந்திரங்களும் ஒருமுறை தினசரி பாராயணம் செய்தால் வாழ்க்கையில் அனைத்து நலன்களும் ஒருங்கே பெற்று நிம்மதியாக வாழ்வார்கள்.

சிரவண விரதம் (ஹயக்ரீவருக்கு உகந்த நாட்கள்)

சித்திரை 01 (14.04.2023) வெள்ளி
சித்திரை 29 (12.05.2023) வெள்ளி
வைகாசி 25 (08.06.2023) வியாழன்
ஆனி 20 (05.07.2023) புதன்
ஆடி 17 (02.08.2023) புதன்
ஆவணி 12 (29.08.2023) செவ்வாய்
புரட்டாசி 09 (26.09.2023) செவ்வாய்

ஐப்பசி 06 (23.10.2023) திங்கள்
கார்த்திகை 03 (19.11.2023) ஞாயிறு
கார்த்திகை 30 (16.12.2023) சனி
மார்கழி 28 (13.01.2024) சனி
தை 26 (09.02.2024) வெள்ளி
மாசி 24 (07.03.2024) வியாழன் (வாக்கியம்)
மாசி 25 (08.03.2024) வெள்ளி (திருக்கணிதம்)
பங்குனி 22 (04.04.2024) வியாழன்

சிரவண விரதம் அனுஷ்டிக்க வேண்டிய முறை

சிரவண நட்சத்திரம் மஹா விஷ்ணுவுக்கு உகந்த நட்சத்திரம். இந்த நட்சத்திரத்தின் அதிதேவதை விஷ்ணு. துவாதசி தினமும் விஷ்ணுவுக்கு உகந்த தினம். இவை இரண்டும் கூடுவது சிரவண துவாதசி ஆகும். இத்தினத்தில் உபவாஸம் இருந்து மஹா விஷ்ணுவைப் பூஜித்தால் பாபங்கள் நீங்கி புண்ணியத்தை அடையலாம் என்று புராணங்கள் கூறுகின்றன. இதனால் ஒவ்வொரு ஏகாதசிக்கு அடுத்த நாள் வரும் துவாதசியன்றும் திருவோணத்தன்றும் மஹா விஷ்ணுவை ஆராதிக்க வேண்டும். பொதுவாக ஏகாதசியன்று உபவாஸம் இருந்து மறுநாள் துவாதசியன்று பாரணம் (உணவருந்த) செய்ய வேண்டியிருப்பதால் அன்று உபவாஸம் இருக்க வேண்டியதில்லை. ஆனால் சிரவண துவாதசியன்று விசேஷ விதியாக உபவாஸம் இருக்க வேண்டும். இதனால், நம் பாபங்கள் விலகி நம் குழந்தைகள் வாழ்க்கையில் உயர்வு பெற்று நலமாக வாழலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur

பிரதோஷ விரதம்

சுக்லபட்சம்	கிருஷ்ணபட்சம்
சித்திரை 20 (03.05.2023) புதன்	சித்திரை 04 (17.04.2023) திங்கள்
வைகாசி 18 (01.06.2023) வியாழன்	வைகாசி 03 (17.05.2023) புதன்
ஆனி 16 (01.07.2023) சனி	வைகாசி 32 (15.06.2023) வியாழன்
ஆடி 14 (30.07.2023) ஞாயிறு	ஆனி 30 (15.07.2023) சனி
ஆவணி 11 (28.08.2023) திங்கள்	ஆடி 28 (13.08.2023) ஞாயிறு
புரட்டாசி 10 (27.09.2023) புதன்	ஆவணி 26 (12.09.2023) செவ்வாய்
ஐப்பசி 09 (26.10.2023) வியாழன்	புரட்டாசி 25 (12.10.2023) வியாழன்
கார்த்திகை 08 (24.11.2023) வெள்ளி	ஐப்பசி 24 (10.11.2023) வெள்ளி
மார்கழி 08 (24.12.2023) ஞாயிறு	கார்த்திகை 24 (10.12.2023) ஞாயிறு
தை 09 (23.01.2024) செவ்வாய்	மார்கழி 24 (09.01.2024) செவ்வாய்
மாசி 09 (21.02.2024) புதன்	தை 24 (07.02.2024) புதன்
பங்குனி 09 (22.03.2024) வெள்ளி	மாசி 25 (08.03.2024) வெள்ளி
	பங்குனி 24 (06.04.2024) சனி

விரதம் அனுஷ்டிக்க வேண்டிய முறை

ஒவ்வொரு மாதமும் சுக்லபட்ச கிருஷ்ணபட்ச பிரதோஷத்தன்றும் பகலில் உபவாஸம் இருந்து இரண்டாவது முறையாக குளித்து அஸ்தமனத்திற்கு மூன்று நாழிகைக்குமுன் (பிற்பகல் 4.30க்கு மேல்) சாம்ப சிவ மூர்த்தியை ரிஷபாரூடராக தரிசனம் செய்ய வேண்டும்.

சனிக்கிழமை பிரதோஷம் வரும் நாளில் உபவாசம் இருந்தால் சந்தான பிராப்தியும், செவ்வாய்க்கிழமை அவ்வாறு இருந்தால் கடன் நிவர்த்தியும், ஞாயிற்றுக்கிழமை அவ்வாறு இருந்தால் தீர்க்காயுள், ஆரோக்கியம் ஆகியவும் ஏற்படும். பிரதோஷ விரத மகிமை அநேக புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

இறைவன், தேவர்களைக் காக்க ஆலகால விஷம் உண்ட காலத்தைத் தான் பிரதோஷ காலம் என்பர். பிரதோஷ காலத்தில் சிவபெருமான் தன் தேவியுடன், ரிஷப வாகனத்தில் ஆலயத்தை மும்முறை வலம் வருவார். அச்சமயம் முதல் சுற்றில் வேத பாராயணமும், இரண்டாவது சுற்றில் திருமுறை பாராயணமும், மூன்றாவது சுற்றில் நாதஸ்வர இன்னிசையும் நடைபெறுவது ஐதீகம்.

அச்சமயம் பக்தர்கள் அனைவரும் 'ஓம் நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓயாமல் சொல்ல வேண்டும்.

கோயிலில் சுவாமியின் திருமுன் இருக்கும் நந்தி தேவருக்கு அருகம்புல் மாலையும், சிவப்பு அரிசியும், நெய் விளக்கும் வைத்து வழிபடுவது சாலச்சிறந்தது.

பிரதோஷ காலத்தில் சிவலிங்கத்தை நந்திதேவரின் இரண்டு கொம்புகளுக்கிடையே கண்டு வணங்க வேண்டும்.

இவ்வாறு, பிரதோஷ காலங்களில் சோமசூக்தப் பிரதட்சிணம் என்னும் முறையில் வலம் வந்து இறைவனை வழிபட வேண்டும்.

பிரதோஷ கால சோமசூக்தப் பிரதட்சணை முறை

முதலில் நந்திகேஸ்வரரின் கொம்புகள் வழியாக சிவலிங்கத்தை தரிசனம் செய்துவிட்டு அப்பிர தட்சிணமாக சண்டிகேஸ்வரர் சந்நதி வரை சென்று அவரை வணங்கி பிறகு பிரதட்சணமாக ஆலயத்தை வலம் வந்து, சுவாமியின் அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் அப்படியே வந்த வழியே திரும்பி மீண்டும் நந்தியின் கொம்குள் வழியே சிவலிங்கத்தைத் தரிசித்து, மீண்டும் சண்டிகேஸ்வரர் சந்நதி வரை சென்று அவரையும் தரிசித்து, மீண்டும் அப்பிரதட்சணமாக வலம் வந்து மீண்டும் சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் அப்படியே வலம் வந்த வழியே திரும்பி, மீண்டும் நந்திகேஸ்வரரின் கொம்புகள் வழியே இறைவனை வழிபட்டு, மீண்டும் சண்டிகேஸ்வரர் சந்நதி வரை சென்று அவரை வழிபட வேண்டும். இவ்வாறு மும்முறை வலம் வந்து வழிபாடு செய்வதே பிரதோஷ கால பிரதட்சண முறையாகும்.



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சந்திர தரிசனம் செய்ய வேண்டிய நாட்கள்

சித்திரை 08 (21.04.2023) வெள்ளி
வைகாசி 07 (21.05.2023) ஞாயிறு
ஆனி 04 (19.06.2023) திங்கள்
ஆடி 03 (19.07.2023) புதன்
ஆவணி 01 (18.08.2023) வெள்ளி
ஆவணி 30 (16.09.2023) சனி
புரட்டாசி 29 (16.10.2023) திங்கள்
ஐப்பசி 28 (14.11.2023) செவ்வாய்
கார்த்திகை 28 (14.12.2023) வியாழன்
மார்கழி 27 (12.01.2024) வெள்ளி
தை 28 (11.02.2024) ஞாயிறு
மாசி 28 (11.03.2024) திங்கள்
பங்குனி 28 (10.04.2024) புதன்

இந்த நாட்களில் வளர்பிறை ஆரம்பித்து முதன்முதலில் சந்திரன் தோன்றுவதால் இந்நாட்களில் மாலை சூர்ய அஸ்தமனம் அடையும்போது சந்திரோதயத்தை மேற்கு கீழ்வானில் தரிசனம் செய்வோர்க்கு அந்த நாள் தொடங்கி அந்த மாதம் முடிய நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு சுபிக்ஷம் பெறுவார்கள் என்பது நிச்சயம். மேலும் 1000 பிறைகள் தரிசனம் செய்து 80க்கும் மேல் ஆயுள் பெறுவதும் நிச்சயம் என்று நவக்கிரக புராணம் கூறுகிறது.

பௌர்நமி விரதம்

சித்திரை 22 (05.05.2023) வெள்ளி
வைகாசி 20 (03.06.2023) சனி
ஆனி 17 (02.07.2023) ஞாயிறு
ஆடி 16 (01.08.2023) செவ்வாய்
ஆவணி 13 (30.08.2023) புதன்
புரட்டாசி 11 (28.09.2023) வியாழன்
ஐப்பசி 11 (28.10.2023) சனி
கார்த்திகை 10 (26.11.2023) ஞாயிறு
மார்கழி 10 (26.12.2023) செவ்வாய்
தை 11 (25.01.2024) வியாழன்
மாசி 11 (23.02.2024) வெள்ளி
பங்குனி 11 (24.03.2024) ஞாயிறு

பௌர்நமி விசேஷங்கள்

சந்திரன் மனதிற்கு அதிகாரமானவர், ஆகவே, பௌர்நமி காலங்களில் மனிதனுடைய மனம் வேகம் கொள்ளும். ஆகவே, அதுசமயம் மனப் பாதிப்பு உள்ளவர்கள் விவேகமில்லாமல் நடந்து கொள்வர். மேலும், சந்திரனின் அதிதேவதை நீர். பௌர்நமி காலங்களில் கடலில் அலைகள் பெருக்கெடுக்கும். சுனாமி போன்ற அலைகள் கூட பௌர்நமி காலங்களில் வரும். ஒவ்வொரு மாதத்தின் பெயருக்கும் சந்திரன் பௌர்நமியன்று எந்த நட்சத்திரத்தில் பிரவேசிக்கிறாரோ அந்த நட்சத்திரத்தின் பெயரையே வைத்துள்ளார்கள்.

அதன்படி, பௌர்நமியன்று சந்திரன் சித்திரை நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் சைத்ர மாதம் எனவும், விசாகம் நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் காலம் வைசாக மாதம் எனவும், கேட்டை என்னும் ஜேஷ்ட நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் காலம் ஜேஷ்ட மாதம் எனவும், பூர்வாஷாட என்னும் பூராடம் நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் ஆஷாட மாதம் எனவும், சிரவண என்னும் திருவோண நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் சிராவண மாதம் எனவும், பூர்வாபாத்ரா என்னும் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் பாத்ரபத மாதம் எனவும், அசுவனி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் ஆஸ்வீன மாதம் எனவும், கிருத்திகை நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் கார்த்திகை மாதம் எனவும், மிருகசீர்ஷத்தில் பிரவேசிக்கும் மாதம் மார்கசிர மாதம் எனவும், பூசம் நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் புஷ்ய மாதம் எனவும், மகம் நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் மாக மாதம் எனவும், உத்திர பல்குனி என்னும் உத்திரம் நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் மாதம் பால்குன மாதம் என்றும் அழைப்பர்.

பிரதி பௌர்நமியன்று காலைமுதல் உபவாசமிருந்து மாலையில் சந்திரனைப் பார்த்தபின் சத்திய நாராயண பூஜை செய்வதால் விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு உள்ள குறைகள் நீக்கி சகல ஐஸ்வர்யங்களையும் தருவேன் என்று காக்கும் கடவுளான ஸ்ரீமந் நாராயணன் சத்தியம் செய்கிறார் என்று கந்த புராணம் கூறுகிறது. இவ்வாறு அவர் சத்தியம் செய்வதால் அவரை சத்தியநாராயணன் என்று அழைத்து வழிபடுகிறோம். பொதுவாக சத்திய நாராயண பூஜை சித்திரையில் தொடங்குவது மிகவும் விசேஷம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சோபகிருது வருஷத்திய சுபமுகூர்த்த நாட்கள் மற்றும் பண்டிகை விசேஷங்கள்

சூரிய கிரஹணம் – 3. கிரஹண நாட்கள் சந்திர கிரஹணம் – 1.

(1) சூரிய கிரஹணம் 1 : ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரை மாதம் 7ந்தேதி (20–4–2023) வியாழக்கிழமை அதிகாலை 7.04 (IST) மணிமுதல் பகல் 12.29 (IST) மணிவரை அசுவனி நட்சத்திரத்தில் நிகழும் ராகு கிரஸ்த முழு சூரிய கிரஹணம் உலகின் கிழக்குப் பகுதிகளான வடமேற்கு வெனின்சுலா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தெரியும். இந்தியாவில் தெரியாது.

(2) சூரிய கிரஹணம் 2 : ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான சோபகிருது வருஷம் புரட்டாசி மாதம் 27ந்தேதி (14–10–2023) சனிக்கிழமை இரவு 8.34 (IST) மணிமுதல் இரவு 2.25 (IST) மணிவரை சித்திரை நட்சத்திரத்தில் நிகழும் கேது கிரஸ்த பகுதி சூரிய கிரஹணம் உலகின் மேற்குப் பகுதிகளான வட–தென்–மத்திய அமெரிக்கப் பகுதிகள், மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் தெரியும். இந்தியாவில் தெரியாது.

(3) சந்திர கிரஹணம் 1 : ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான சோபகிருது வருஷம் ஐப்பசி மாதம் 11ந்தேதி (28–10–2023) சனிக்கிழமை இரவு 1.03 (IST) மணிமுதல் இரவு 2.24 (IST) மணிவரை அசுவனி நட்சத்திரத்தில் நிகழும் ராகு கிரஸ்த பகுதி சந்திர கிரஹணம் இந்தியாவில் தெரியும்.

			ம : நி : வி
கிரஹண ஆரம்பம்	:	29-10-2023	01:03:40 AM
கிரஹண மத்யமம்	:	29-10-2023	01:43:45 AM
கிரஹண முடிவு	:	29-10-2023	02:23:48 AM
கிரஹண பரிமாணம்	:	-----	0.1306

கிரஹண தோஷமுள்ள நட்சத்திரங்கள் : ரேவதி, அசுவனி, பரணி, மகம், மூலம். கிரஹண தோஷமுள்ள நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்து கொள்ளவும். அன்று பௌர்ணமி சிராத்தம், போஜனம் 3.00 மணிக்குள் செய்து கொள்ளவும்.

(4) சூரிய கிரஹணம் 3 : ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான சோபகிருது வருஷம் பங்குனி மாதம் 26ந்தேதி (8–4–2024) திங்கட்கிழமை இரவு 9.12 (IST) மணிமுதல் இரவு 2.22 (IST) மணிவரை ரேவதி நட்சத்திரத்தில் நிகழும் ராகு கிரஸ்த முழு சூரிய கிரஹணம் மெக்ஸிகோ, வடஅமெரிக்கா, கனடா, நார்வே, ஐஸ்லாந்து, பிரிட்டன், ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளில் தெரியும். இந்தியாவில் தெரியாது.

ஐவர் திருநட்சத்திர தினங்கள்

சித்திரை 31 – ஸ்ரீஅப்பர் சுவாமிகள்
வைகாசி 11 – ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள்
வைகாசி 22 – ஸ்ரீதிருஞானசம்பந்தர்
ஆனி 08 – ஸ்ரீமாணிக்கவாசகர்
ஆடி 10 – ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்

நாக பஞ்சமி (கருட பஞ்சமி) - ஆவணி மாதம் 04ந் தேதி (21.08.2023) திங்கட்கிழமை

இன்று கருடன் அவதரித்த தினம். முதல் நாள் ஒருவேளை உணவு அருந்தி கருட பஞ்சமியன்று காலை ஸ்நானம் செய்து 12 நாகர்களை ஆவாஹன பூஜை செய்து பால் பாயாஸம் நிவேதனம் செய்து 10 முடிச்சுக்கள் உள்ள தோரகத்தைக் கட்டிக் கொண்டால் தீர்க்க ஸௌமங்கல்யம் கிடைக்கும் என்று விரத சூடாமணி என்றும் நூல் கூறுகிறது.

பன்னிரு ஆழ்வார்கள் திருநட்சத்திர தினங்கள்

சித்திரை 21 – ஸ்ரீமதுரகவியாழ்வார்
வைகாசி 19 – ஸ்ரீநம்மாழ்வார்
ஆனி 14 – ஸ்ரீபெரியாழ்வார்
ஆடி 06 – ஸ்ரீஆண்டாள்
ஐப்பசி 06 – ஸ்ரீபொய்கையாழ்வார்
ஐப்பசி 07 – ஸ்ரீபூதத்தாழ்வார்
ஐப்பசி 08 – ஸ்ரீபேயாழ்வார்
கார்த்திகை 11 – ஸ்ரீதிருமங்கையாழ்வார்
கார்த்திகை 12 – ஸ்ரீதிருப்பாணாழ்வார்
மார்கழி 24 – ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார்
தை 14 – ஸ்ரீதிருமழிசையாழ்வார்
மாசி 09 – ஸ்ரீகுலசேகராழ்வார்

வாஸ்து நேர அட்டவணை

வாஸ்து புருஷன் நித்திரை விடும் தேதி	நாழிகை அளவில்	மணி அளவில்
சித்திரை 10	05	02–00
வைகாசி 21	08	03–12
ஆடி 11	02	00–48
ஆவணி 06	21	08–24
ஐப்பசி 11	02	00–48
கார்த்திகை 08	10	04–00
தை 12	08	03–12
மாசி 22	08	03–12

மேலே குறிப்பிட்ட தினங்களில் குறிப்பிட்ட நாழிகைக்குமேல் 3.45 நாழிகைக்குள் 90 நிமிடம் வாஸ்து புருஷன் நித்திரை கலந்து தந்த சுத்தி, ஸ்நானம், பூஜை, போஜனம், தாம்பூல தாரணம் ஆகிய 5 காரியங்களையும் 3/4 (18 நிமிடம்) நாழிகை வீதம் செய்து சயனிப்பார். இதற்குள் போஜனம், தாம்பூல தாரணம் செய்யும் கடைசி 1.30 (36 நிமிடத்திற்குள்) நாழிகைக்குள் முறைப்படி வாஸ்து பூஜை செய்து கிரகாரம்பம் செய்ய உத்தமம்.

சில முக்கிய ஊர்களுக்கு அந்தந்த ஊர் சூரிய உதயத்திருத்தமாக வாஸ்து புருஷன் போஜன தாம்பூல தாரண நேரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. வாஸ்து புருஷன் நித்திரை விடும் நேரங்களுக்கு ராகு காலம், எமகண்டம், வாரதோஷம், மரண யோகம், நட்சத்திர தோஷம், திதி தோஷம் ஆகிய எவ்வகைத் தோஷமுமில்லை என்பது பொதுவான கருத்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முக்கிய ஊர்களுக்கு வாஸ்து புருஷன் போஜனம், தாம்பூல தாரணம் செய்யும் நேரங்கள்

தேதி	தஞ்சாவூர்	கும்பகோணம்	திருவனந்தபுரம்
சித் 10	8-55 A.M. - 9-31 A.M.	8-52 A.M. - 9-28 A.M.	9-07 A.M. - 9-43 A.M.
வை 21	10-00 A.M. - 10-36 A.M.	9-59 A.M. - 10-35 A.M.	10-12 A.M. - 10-48 A.M.
ஆடி 11	7-45 A.M. - 8-21 A.M.	7-42 A.M. - 8-18 A.M.	7-59 A.M. - 8-35 A.M.
ஆவ 06	3-25 P.M. - 4-01 P.M.	3-21 P.M. - 3-57 P.M.	3-36 P.M. - 4-12 P.M.
ஐப்பசி 11	7-50 A.M. - 8-26 A.M.	7-45 A.M. - 8-21 A.M.	7-56 A.M. - 8-32 A.M.
கார் 08	11-10 A.M. - 11-46 A.M.	11-06 A.M. - 11-42 A.M.	11-14 A.M. - 11-50 A.M.
தை 12	10-47 A.M. - 11-23 A.M.	10-43 A.M. - 11-19 A.M.	10-50 A.M. - 11-26 A.M.
மாசி 22	10-34 A.M. - 11-10 A.M.	10-31 A.M. - 11-07 A.M.	10-42 A.M. - 11-18 A.M.
தேதி	**சென்னை**	**மதுரை**	**திருச்சி**
சித் 10	8-50 A.M. - 9-26 A.M.	9-01 A.M. - 9-37 A.M.	8-57 A.M. - 9-33 A.M.
வை 21	9-51 A.M. - 10-27 A.M.	10-06 A.M. - 11-44 A.M.	10-02 A.M. - 10-38 A.M.
ஆடி 11	7-30 A.M. - 8-06 A.M.	7-53 A.M. - 8-29 A.M.	7-47 A.M. - 8-23 A.M.
ஆவ 06	3-19 P.M. - 3-55 P.M.	3-32 P.M. - 4-08 P.M.	3-27 P.M. - 4-03 P.M.
ஐப்பசி 11	7-47 A.M. - 8-23 A.M.	7-54 A.M. - 8-30 A.M.	7-52 A.M. - 8-28 A.M.
கார் 08	11-09 A.M. - 11-45 A.M.	11-11 A.M. - 11-47 A.M.	11-11 A.M. - 11-47 A.M.
தை 12	10-46 A.M. - 11-22 A.M.	10-49 A.M. - 11-25 A.M.	10-49 A.M. - 11-25 A.M.
மாசி 22	10-30 A.M. - 11-06 A.M.	10-37 A.M. - 11-13 A.M.	10-36 A.M. - 11-12 A.M.
தேதி	**சேலம்**	**கோவை**	**பழனி**
சித் 10	8-59 A.M. - 9-35 A.M.	9-04 A.M. - 9-40 A.M.	9-00 A.M. - 9-36 A.M.
வை 21	10-02 A.M. - 10-38 A.M.	10-09 A.M. - 10-45 A.M.	10-07 A.M. - 10-43 A.M.
ஆடி 11	7-48 A.M. - 8-24 A.M.	7-54 A.M. - 8-30 A.M.	7-50 A.M. - 8-26 A.M.
ஆவ 06	3-28 P.M. - 4-04 P.M.	3-34 P.M. - 4-10 P.M.	3-29 P.M. - 4-05 P.M.
ஐப்பசி 11	7-55 A.M. - 8-31 A.M.	7-59 A.M. - 8-35 A.M.	7-52 A.M. - 8-28 A.M.
கார் 08	11-14 A.M. - 11-50 A.M.	11-19 A.M. - 11-55 A.M.	11-13 A.M. - 11-49 A.M.
தை 12	10-52 A.M. - 11-28 A.M.	10-56 A.M. - 11-32 A.M.	10-49 A.M. - 11-25 A.M.
மாசி 22	10-39 A.M. - 11-15 A.M.	10-39 A.M. - 11-15 A.M.	10-39 A.M. - 11-15 A.M.
தேதி	**கரூர்**	**திருநெல்வேலி**	**வேலூர்**
சித் 10	8-57 A.M. - 9-33 A.M.	9-01 A.M. - 9-37 A.M.	8-51 A.M. - 9-27 A.M.
வை 21	10-05 A.M. - 10-42 A.M.	10-09 A.M. - 10-45 A.M.	9-58 A.M. - 10-34 A.M.
ஆடி 11	7-47 A.M. - 8-23 A.M.	7-52 A.M. - 8-28 A.M.	7-40 A.M. - 8-16 A.M.
ஆவ 06	3-26 P.M. - 4-02 P.M.	3-30 P.M. - 4-06 P.M.	3-20 P.M. - 3-56 P.M.
ஐப்பசி 11	7-51 A.M. - 8-27 A.M.	7-50 A.M. - 8-26 A.M.	7-48 A.M. - 8-24 A.M.
கார் 08	11-11 A.M. - 11-47 A.M.	11-10 A.M. - 11-46 A.M.	11-10 A.M. - 11-46 A.M.
தை 12	10-48 A.M. - 11-24 A.M.	10-46 A.M. - 11-22 A.M.	10-46 A.M. - 11-22 A.M.
மாசி 22	10-37 A.M. - 11-13 A.M.	10-37 A.M. - 11-13 A.M.	10-33 A.M. - 11-09 A.M.
தேதி	**மும்பை**	**ஹைதராபாத்**	**புதுடெல்லி**
சித் 10	9-13 A.M. - 9-49 A.M.	8-52 A.M. - 9-28 A.M.	8-44 A.M. - 9-20 A.M.
வை 21	10-19 A.M. - 10-55 A.M.	9-59 A.M. - 10-35 A.M.	9-34 A.M. - 10-10 A.M.
ஆடி 11	7-48 A.M. - 8-24 A.M.	7-38 A.M. - 8-14 A.M.	7-29 A.M. - 8-05 A.M.
ஆவ 06	3-43 P.M. - 4-19 P.M.	3-22 P.M. - 3-58 P.M.	3-17 P.M. - 3-53 P.M.
ஐப்பசி 11	8-23 A.M. - 8-59 A.M.	8-00 A.M. - 8-36 A.M.	8-16 A.M. - 8-52 A.M.
கார் 08	11-46 A.M. - 12-22 A.M.	11-22 A.M. - 11-58 A.M.	11-48 A.M. - 12-24 A.M.
தை 12	11-23 A.M. - 11-59 A.M.	10-59 A.M. - 11-35 A.M.	11-23 A.M. - 11-59 A.M.
மாசி 22	11-02 A.M. - 11-38 A.M.	10-40 A.M. - 11-16 A.M.	10-51 A.M. - 11-27 A.M.
தேதி	**பெங்களூரு**	**திருவண்ணாமலை**	**கடலூர்**
சித் 10	9-00 A.M. - 9-36 A.M.	8-54 A.M. - 9-30 A.M.	8-52 A.M. - 9-28 A.M.
வை 21	10-08 A.M. - 10-44 A.M.	9-59 A.M. - 10-35 A.M.	9-56 A.M. - 10-32 A.M.
ஆடி 11	7-49 A.M. - 8-25 A.M.	7-41 A.M. - 8-17 A.M.	7-42 A.M. - 8-18 A.M.
ஆவ 06	3-30 P.M. - 4-06 P.M.	3-21 P.M. - 3-57 P.M.	3-22 P.M. - 3-58 P.M.
ஐப்பசி 11	7-58 A.M. - 8-34 A.M.	7-48 A.M. - 8-24 A.M.	7-49 A.M. - 8-25 A.M.
கார் 08	11-19 A.M. - 11-55 A.M.	11-09 A.M. - 11-45 A.M.	11-09 A.M. - 11-45 A.M.
தை 12	10-56 A.M. - 11-32 A.M.	10-46 A.M. - 11-22 A.M.	10-46 A.M. - 11-22 A.M.
மாசி 22	10-40 A.M. - 11-16 A.M.	10-33 A.M. - 11-09 A.M.	10-33 A.M. - 11-09 A.M.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அக்ஷய திருதியை

சித்திரை மாதம் 09ந் தேதி (22.04.2023) சனிக்கிழமை - அக்ஷய திருதியை புண்யகாலம்
சித்திரை மாதம் 10ந் தேதி (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை - அக்ஷய திருதியை

இன்று சூர்ய உதய காலத்தில் புண்ய தீர்த்த ஸ்நானம் செய்து எள்ளினால் பித்ரு தர்ப்பணம் செய்து விஷ்ணு பூஜை செய்யவேண்டும். இன்று உஷ்ண காலத்தில் உஷ்ணத்தைச் சமனப்படுத்தும் விசிறி, நீர்மோர், தயிரன்னம், பலவித தானியங்கள், கரும்புவகை இகைவளைத் தானம் செய்தால் அழிவற்ற (அக்ஷயமான) பலன்களைத் தரும் என்று புராணங்கள் கூறுகின்றன. சூரியனும் சந்திரனும் ஒரு சேர உச்சமாக இருக்கும் இந்நாள் பரசுராம ஜெயந்தி நாளாகும்.

இன்று சில வருடங்களாக வழக்கத்தில் தங்கம் வாங்க ஏற்ற நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று தங்கம் வாங்கி அணிய நல்ல நேரங்கள் 22.04.2023 சனிக்கிழமை

காலை 10-30 – 01-00, மாலை 05-00 – 07-30.

நரசிம்ம ஜெயந்தி

சித்திரை மாதம் 21ந் தேதி (04.05.2023) வியாழக்கிழமை - நரசிம்ம ஜெயந்தி

நரசிம்ம மூர்த்தியின் அவதார தினமான இன்று காலை முதல் விரதம் இருந்து மாலை பிரதோஷ காலத்தில்

"உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்
ஜ்வலந்தம் சர்வதோமுகம் !
நரசிம்மம் பீஷணம் பத்ரம்
ம்ருத்யும்மருத்யும் நமாம்யஹம்"

– என்னும் இந்த ஸ்தோத்திரத்தை 32 முறை சொல்லி நரசிம்மரை வழிபட்டு

பானகம், பாசிபருப்பு மற்றும் அன்ன நைவேத்யங்கள் செய்து விரதத்தை முடித்தால் நரசிம்மமூர்த்தியின் அருளால் பொருளாதாரக் கடன்கள் மற்றும் பிறவிக் கடன்கள் தீர்ந்து மங்கலம் பெறலாம்.

கிருஷ்ண ஜெயந்தி விரதம்

கோகுலாஷ்டமி :-

ஆவணி 20 (06.09.2023) புதன்கிழமை

வைகானஸ ஸ்ரீஜெயந்தி :-

– ஆவணி 20 (06.09.2023) புதன்கிழமை

பாஞ்சராத்ர முனித்ரய ஸ்ரீஜெயந்தி :-

– ஆவணி 21 (07.09.2023) வியாழக்கிழமை

அவரவர் சம்ப்ரதாய (Rules and Regulations) பேதத்தால் வேறு வேறு தினங்களில் கிருஷ்ண ஜெயந்தி வருகிறது. அவரவர்க்குரிய தினங்களில் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட வேண்டும்.

கிருஷ்ண ஜெயந்தியன்று காலையில் குளித்து கோலமிட்டு கிருஷ்ணரை நன்கு அலங்கரித்து விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். அன்று முழுவதும் கிருஷ்ண ஸ்தோத்திரங்களைச் சொல்லியும், பாகவத புராணம் படித்தும் பலவகை பலகாரங்களைத் தயாரித்து வைத்தும் குழந்தைகளுக்கு கிருஷ்ணர் போல அலங்கரித்தும் வீடுவாசல் முதல் பூஜை அறை வரை குழந்தைகளின் பாதம் போட்டு வீட்டை நன்கு அலங்கரித்து மாலையில் மீண்டும் குளித்து கிருஷ்ண லீலை உள்ள ஸ்ரீ பாகவத புராணம் படித்து இரவில் பலவித பலகாரங்கள், அன்னங்கள், வெண்ணெய் வைத்து,

"தேவகீ ஸுத கோவிந்த
வாசுதேவ ஜகத்பதே
தேஹிமே தனயம் கிருஷ்ண
த்வாமஹம் சரணம் கத:
தேவ தேவ ஜகந்நாத
கோத்ர விருத்தி கரோ ப்ரபு:
தேஹிமே தனயம் ஸீக்ரம்
ஆயுஷ்மந்தம் யசஸ்வினம்"

– என்னும் ஸ்ரீ கிருஷ்ண மந்திரத்தை 16 முறை பாராயணம் செய்து வழிபட்டு விரதம் முடிக்க ஸ்ரீ கிருஷ்ணரின் அருளால் இகலோக சுகங்கள் அனைத்தும் பெற்று குழந்தைகளுடன் சுகமாக இருப்பார்கள் என்று ஸ்ரீமத் மஹா பாகவதமும் விரத சூடாமணியும் கூறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆகாமாவை நாட்கள் (நதிகளில் நீராட)

ஆஷாடம், கார்த்திகை, மாகம், வைசாகம் ஆகிய மாதங்களின் பௌர்ணமி திதியின் உதய காலத்தில் நதிகளில் ஸ்நானம் செய்தால் சகல பாபங்களும் தொலைந்து புண்ணியம் ஏற்படும் என்று புராணங்கள் கூறுகின்றன. மேலும், அன்று தானங்கள் தருவதும் மிகவும் விசேஷமானதாகும்.

சித்திரை 22 (05.05.2023) வெள்ளி
ஆனி 18 (03.07.2023) திங்கள்
கார்த்திகை 11 (27.11.2023) திங்கள்
மாசி 12 (24.02.2024) சனி

– இத்தினங்களில் உதய காலத்தில் பௌர்நமி திதி இருப்பதால் காலையில் நதிஸ்நானம் செய்ய உத்தமமான பலன்கள் கொடுக்கும்.

ஜேஷ்டா விரதம்

புரட்டாசி மாதம் 04ந் தேதி (21.09.2023) வியாழக்கிழமை

முதல் நாள் அனுஷம் நட்சத்திரத்தில் கும்பத்தில் மஹாலட்சுமியின் மூத்த சகோதரியான ஜேஷ்டா தேவியை ஆவாஹனம் செய்து இன்று கேட்டை நட்சத்திரத்தில் பூஜை செய்து அதற்கு அடுத்த நாள் மூலம் நட்சத்திரத்தில் கும்ப தீர்த்தத்தை நதியில் கலக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பிறந்து பின் இறந்த குழந்தைகளை உடைய தாய்மார்கள், குழந்தைகள் இல்லாத பெண்கள், குறைப் பிரசவமுள்ள பெண்கள் தங்கள் பாபங்கள் நீங்கப்பட வேண்டி அலக்ஷ்மி பரிகாரமாக இந்த பூஜை செய்யப்படுகிறது.

இதனால் சந்ததி விருத்தியும் லட்சுமி கடாட்சமும் ஏற்படும்.

வரலட்சுமி விரதம்

ஆவணி மாதம் 08ந் தேதி (25.08.2023) வெள்ளிக்கிழமை

சுமங்கலிப் பெண்கள் இந்த விரதத்தை அனுஷ்டித்து வரலட்சுமிக்குப் பூஜை செய்ய வேண்டும். அன்றைய தினம் வீட்டைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிட வேண்டும். ஒரு மண்டபம் போல் அமைத்து, அம்மண்டபத்தில் முதலில் ஒரு அடி சம சதுரமாக நெல்லைப் பரப்பி அதன்மீது ஒரு வெள்ளி அல்லது செப்புக் குடத்தை வைத்து அதை அரிசி அல்லது ஜலத்தால் நிரப்பி, மாவிலைக் கொத்து, தேங்காய் முதலியவற்றை வைத்து, சந்தனம், அக்ஷதை மற்றும் புஷ்பங்களால் அலங்காரம் செய்து அந்தக் கலசத்தின் மேல் லட்சுமி தேவியின் அழகான உருவத்தை வைத்துப் பூஜை செய்ய வேண்டும். அன்றைய தினம் பூஜையில் வைத்த நோன்புக் கயிற்றை வலது கையில் அணிய வேண்டும். தனக்குத் தெரிந்த மஹாலட்சுமியின் மந்திரங்களைச் சொல்லி பூஜை செய்து சுமங்கலி பூஜையும் செய்து அவர்களுக்கு உணவளித்துப் தானும் உணவருந்த வேண்டும். இவ்வாறு செய்வதால் நீண்ட ஆயுளும் மங்கலமும் பெறுவர்.

ரிஷி பஞ்சமி விரதம்

புரட்டாசி மாதம் 03ந் தேதி (20.09.2023) புதன்கிழமை

மிகவும் பிரசித்தமான இந்த விரதம் பெண்களால் அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டியது. பெண்கள் வயதான பின்பு தங்கள் மாதவிடாய் காலங்கள் நீங்கியதும் தங்கள் சிறு வயதில் மாதவிடாய் காலங்களில் அனுஷ்டிக்க வேண்டிய பல வித நியமங்களை அனுஷ்டித்தால் ஏற்பட்ட தோஷங்களை போக்கும். ரிஷிகளை பூஜிப்பதற்கும் அவர்களின் அருளைப் பெறவும் அனுஷ்டிக்கப்படும் விரதம்.

இன்று காலை நாயுருவி குச்சிகளால் பல் துலக்கி நதிஸ்நானம் செய்து மாதவிடாய் காலத்தில் ஏற்பட்ட பலவிதமான தோஷங்களுக்கும் பரிகாரமாக ஒரு சுமங்கலிக்கு வஸ்திர தானம் செய்து நதி ஜலத்தை குடத்தில் வைத்து யமுனா தேவியையும் சப்த ரிஷி பெருமக்களுக்கான காஸ்யப்பர், அத்ரி, பாரத்வாஜர், விஸ்வாமித்திரர், கௌதமர், ஜமத்க்னி, வசிஷ்டர் ஆகியோருடன் அருந்ததியையும் ஆவாஹனம் செய்து 8 வகையான பழங்கள் தின்பண்டங்கள் வைத்துப் பூஜை செய்ய வேண்டும்.

இதனால் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் நடந்த முன்ஜென்ம தோஷங்கள் நீங்கி இந்த ஜென்ம பாபங்களின் நிவாரணமும் தீர்க்க ஸௌமங்கல்யமும் வம்ச விருத்தியும் பெறலாம் என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நவராத்திரி விரதம்

நவராத்திரி ஆரம்பம்	– புரட்டாசி 28 (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை
பத்ரகாளியஷ்டமி	– பத்ரகாளி அவதார நாள் ஐப்பசி 05 (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை
சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை	– ஐப்பசி 06 (23.10.2023) திங்கட்கிழமை
ஆயுத பூஜை செய்ய	– பகல் 12.15 – 02.15
விஜய தசமி	– ஐப்பசி 07 (24.10.2023) செவ்வாய்க்கிழமை
மறு பூஜை செய்ய	– அதிகாலை 5.00 – 6.00 / பகல் 10.46 – 11.16

பரப்பிரம்ம ஸ்வரூபியான பராசக்தி உலக நன்மைக்காக 5 முறை அவதரித்திருக்கிறாள். முதலாவதாக, மஹாவிஷ்ணு பாற்கடலில் சயனித்திருக்கும் பொழுது, நாபிலிருந்த பிரம்மாவிற்குப் பிரசன்னமாகி அவருக்குத் தெளிவையும், சிருஷ்டிக்கும் வல்லமையையும் கொடுத்தாள்.

இரண்டாவதாக மஹாவிஷ்ணுவின் மூலமாக மோகினியாக அவதரித்தாள்

மூன்றாவதாக தக்ஷனின் புதல்வியாக தாக்ஷாயணி என்னும் பெயருடன் அவதரித்தாள்.

நான்காவதாக ஈஸ்வரனை மணக்க பார்வதி தேவியாக காஷ்மீரத்தில் அவதரித்தாள்.

ஐந்தாவதாக பண்டாசுரனை அழிக்க லலிதாம்பாள் என்னும் பெயருடன் ஸ்ரீ சக்ரம் என்ற ரதத்தில் அவதரித்தாள்.

நவராத்திரி 9 நாட்களிலும் 9 வகையான புஷ்பம் கொண்டு 9 வகையான அலங்காரம் செய்வது வழக்கம். நவராத்திரியில் சுமங்கலிகளையும் 10 வயதுக்குட்பட்ட கன்னிப் பெண்களையும் பூஜிப்பது அளவிடற்கரிய புண்ணியத்தைக் கொடுக்கும்.

மஹாநவமி என்னும் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜையன்று சரஸ்வதி கடாட்சம் வேண்டி தங்கள் ஜீவனத்திற்கு ஆதாரமான ஆயுதங்கள், கருவிகள், இசைக்கருவிகள் இவைகளுடன் புஸ்தகங்களையும் வைத்துப் பூஜைசெய்ய வேண்டும். அன்று கட்டாயம் ஒரு புதுப் புத்தகத்தை வாங்கிப் பூஜையில் வைப்பது சுபம்.

மறுநாள் விஜயதசமி அன்று மறுபூஜை செய்து தொழில் தொடங்கினால் அவ்வருடம் முழுவதும் நல்ல செல்வச் செழிப்பு ஏற்படும். இந்த நவராத்திரியை சாரதா நவராத்திரி என்று கூறுவர்.

இதர நவராத்திரிகள்

வராஹி நவராத்திரி	– ஆனி மாதம் 04ந்தேதி (19.06.2023) திங்கட்கிழமை முதல் ஆனி மாதம் 12ந்தேதி (27.06.2023) செவ்வாய்க்கிழமை வரை
சியாமளா நவராத்திரி	– தை மாதம் 27ந்தேதி (10.02.2024) சனிக்கிழமை முதல் மாசி மாதம் 05ந்தேதி (17.02.2024) சனிக்கிழமை வரை
வஸந்த நவராத்திரி	– பங்குனி மாதம் 27ந்தேதி (09.04.2024) செவ்வாய்க்கிழமை முதல் சித்திரை மாதம் 04ந்தேதி (17.04.2024) புதன்கிழமை வரை

இந்த நவராத்திரி காலங்களிலும் தினசரி மாலையில் அம்பிகையை பூஜை செய்து தேவி பாகவதம் படிக்க பராசக்தியான கடாக்ஷத்தினால் கல்வி, செல்வம், வீரம் என்றும் மூன்றையும் பெற்று சகல துறைகளிலும் சகல விதத்திலும் முன்னேற்றத்துடன் வளமான வாழ்க்கையைப் பெறலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆவணி அவிட்டம் / காயத்ரி ஜபம்

ஆவணி 12ந் தேதி (29.08.2023) செவ்வாய்க்கிழமை - ருக்உபாகர்மா

ஆவணி 13ந் தேதி (30.08.2023) புதன்கிழமை - யஜுருபாகர்மா

ஆவணி 14ந் தேதி (31.08.2023) வியாழக்கிழமை - காயத்ரி ஜெபம்

ஆவணி 30ந் தேதி (16.09.2023) சனிக்கிழமை - சாமஉபாகர்மா

உபாகர்மா அன்று அனைவரும் புது பூணூல் அணிந்து அதிகாலை 'காமோகாரிஷி, மன்யன்யுகாரிஷி' ஜபம் செய்து தேவரிஷி, காண்ட ரிஷி, பித்ரு தர்ப்பணம் செய்து வேதங்களைப் பிரசுரம் செய்த ரிஷிக்களுக்கு ஹோமம் செய்து, வேதங்கள், சாஸ்திரங்கள் இவைகளைச் சொல்லி வேதத்தின் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டியது.

மற்ற நாட்களில் வேதம் பயிலாதவரும் இன்று அவசியம் வேத பாராயணம் செய்ய வேண்டும். பூணூல் அணிந்து கொள்வது ஒரு அங்கமே தவிர வேதம் சொல்லுவதே மிக முக்கியமானது. இன்று வடநாட்டில் 'ரக்ஷாபந்தனம்' என்ற விழாவை அனுஷ்டிக்கின்றனர்.

மறுநாள் காலையில் யதா சக்தி காயத்ரி ஜபம் செய்யவேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது.

அனந்த விரதம்

புரட்டாசி மாதம் 11ந் தேதி (28.09.2023) வியாழக்கிழமை

சகல பாபங்களையும் போக்கி நன்மைகள் அனைத்தையும் தரும் இந்த விரதம் தம்பதிகள் இணைந்து செய்யவேண்டியது.

காலையில் குளித்து கும்பம் அமைத்து யமுனா பூஜை செய்து 14 சரடுகளைப் பூஜை செய்து குடும்பத்தில் உள்ள அனைவரும் கைகளில் கட்டிக் கொள்ள வேண்டும்.

இதனால் ஸ்ரீமந் நாராயணின் பேரருளால் அனைத்து நன்மைகளும் ஏற்படும் என்று விரத சூடாமணி என்னும் நூல் கூறுகிறது.

தீபாவளிப் பண்டிகை

ஐப்பசி மாதம் 26ந் தேதி (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை



இன்று ஸ்ரீகிருஷ்ண பகவான் சத்ய பாமாவின் துணையுடன் நரகாசுரனை வதம் செய்த நாள்.

இன்று அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன் நல்லெண்ணெயைப் பூசிக் கொண்டு வெந்நீரில் குளிக்க வேண்டும்.

தீபாவளி அன்று நல்லெண்ணெயில் லட்சுமி தேவியும் வெந்நீரில் கங்கா தேவியும் வாஸம் செய்வதாக ஐதீகம்.

இன்று நரகாசுரனுக்கு கிருஷ்ண பகவான் வரமருளியபடி தைல ஸ்நானம் செய்து புது வஸ்திரங்கள் அணிந்து உத்ஸவமாக கொண்டாட வேண்டும்.

பொதுவாக, சூரிய உதயத்திற்கு முன் தைல ஸ்நானம் கூடாது என்று சூரியன் உதயமாகி 2.30 மணிநேரம் கழித்துத்தான் தைலஸ்நானம் செய்ய வேண்டும் என்றும் தர்மசாஸ்திரம் கூறினாலும் தீபாவளி அன்று விதிவிலக்கு உள்ளது.

இன்று அகம்பாவத்தினால் தைலஸ்நானம் செய்யாதவர் நரகத்தை அடைவர் என்று சாஸ்திரம் கூறுகிறது. பிறகு யமதர்ப்பணம் செய்து வீட்டில் பூஜைகள் முடித்து புது வஸ்திரம் தரித்து பட்டாசுகள் வெடிக்க வேண்டும். அன்று மாலை லட்சுமி பூஜை செய்தால் வருடம் முழுவதும் லட்சுமி கடாக்ஷம் பெறுவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யமத் துவிதியை

ஐப்பசி மாதம் 29ந் தேதி (15.11.2023) புதன்கிழமை

இன்று யமத்துவிதியை எனப்படும். இன்று யமனை ஆராதனை செய்வோர் யமலோகம் செல்லுவதில்லை என்று கந்த புராணம் கூறுகிறது. இன்று தன்வீட்டில் உணவு அருந்தாமல் சகோதரி வீட்டிற்குச் சென்று சகோதரிக்கு ஆடை ஆபரணங்கள் பரிசளித்து உணவு அருந்தினால் சகோதரி தீர்க்க சுமங்கலியாக இருப்பாள். சகோதரனும் நீண்ட ஆயுளைப் பெறுவான்.

அக்ஷய நவமி

கார்த்திகை மாதம் 05ந் தேதி (21.11.2023) செவ்வாய்க்கிழமை

இன்று கூஸ்மாண்டகன் என்ற அசுரனை மகாவிஷ்ணு வதம் செய்த நாள். இறந்த கூஸ்மாண்டகனின் ரோமங்களிலிருந்து பூசணிக் கொடிகள் உண்டாயிருப்பதாக ஐதீகம். ஆகவே, இன்று பூசனிக்காயைத் தானம் செய்வதால் மகாவிஷ்ணுவின் ப்ரீதியும் பாப நிவர்த்தியும் ஏற்படுகிறது.

இன்று ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கும் துளசி தேவிக்கும் விவாகம் செய்பவர் கன்னியா தானம் செய்த பலனை அடைவர்.

நெல்லி மரத்தையும் அரச மரத்தையும் இந்த தினத்தில் விவாகம் செய்வித்தால் அவர்கள் செய்யும் புண்ணிய காரியங்கள் அழிவதே இல்லை என்று ஸனக்குமார ஸம்ஹிதை கூறுகிறது.

கார்த்திகை தீபம்

கார்த்திகை 09 (25.11.2023) சனிக்கிழமை

– பரணி தீபம்

கார்த்திகை 10 (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை

– அண்ணாமலை தீபம்

– சர்வாலய தீபம், வைகானஸ தீபம்

கார்த்திகை 11 (27.11.2023) திங்கட்கிழமை

– பாஞ்சராத்ர விஷ்ணு தீபம்

இந்த மூன்று நாளும் மாலையில் வீட்டில் தீபம் ஏற்றுவது லட்சுமி கடாக்ஷத்தைத் தரும்.

ஐப்பசி மாதம் அமாவாசை கழித்து வரும் பிரதமையில் ஆரம்பித்து 30 நாட்கள் ஒருபோதும் அணையாமலிக்கும்படி தீபத்தை ஏற்றி மகா விஷ்ணுவை வழிபட்டு 30வது நாள் ஒரு பிராமணரை வரவழைத்து போஜனம் கொடுத்து தீபத்துடன் தக்ஷிணையும் சமர்ப்பித்தால் நெடுநாட்கள் தீராத நோயும் தீரும் என்று விரத சூடாமணி கூறுகிறது.



பத்துவித தீபங்கள் ஏற்ற உகந்தவை

1. தரையில் வரிசையாக அகல்களை ஏற்றுதல்.
2. கோலம் போட்டு அதில் அகல்களை வட்டமாக வைத்து ஏற்றுதல்.
3. சித்திரம் வரைந்து அதில் தீபம் ஏற்றுதல்.
4. மாலை வடிவில் தீபம் ஏற்றுதல்.
5. அடுக்கு அடுக்காக தீபம் ஏற்றுதல்.
6. மேல் முற்றத்தில் ஆகாச தீபம் ஏற்றுதல்.
7. ஜலத்தில் மிதக்கவிடும் ஜலதீபம் ஏற்றுதல்.
8. ஓடம்போல் செய்து அதில் தீபம் வைத்து ஜலத்தில் விடுதல்.
9. கோயில் கோபுரங்களின் மீது தீபம் ஏற்றுதல்.
10. வீடு முழுவதும் எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றுதல்.

தசாவதார ஜெயந்தி தினங்கள்

சித்திரை	04	–	ஸ்ரீமத்ஸ்யர்	ஆவணி	21	–	ஸ்ரீகண்ணன்
சித்திரை	09	–	ஸ்ரீபலராமர்	ஆவணி	31	–	ஸ்ரீகல்கி
சித்திரை	21	–	ஸ்ரீநரசிம்மர்	புரட்டாசி	09	–	ஸ்ரீவாமனர்
வைகாசி	31	–	ஸ்ரீகூர்மர்	மார்கழி	12	–	ஸ்ரீபரசுராமர்

இவ்வருடம் சைத்ர பகுள பஞ்சமி இல்லாமையால் வராக ஜெயந்தியும் சைத்ர சுத்த நவமி இல்லாமையால் ஸ்ரீராமநவமியும் கிடையாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போகிப் பண்டிகை

மார்கழி மாதம் 29ந் தேதி (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை

இது இந்திரனுக்காக கொண்டாடப்படும் பண்டிகை. இந்திரனைப் போல் நாமும் போகம் அனுபவிக்க வேண்டுமென்பதற்காக பழைய பாய், பாண்டங்களை உபயோகித்திலிருந்து நீக்கிவிட்டு புதியதை உபயோகிக்க ஆரம்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகை.

பழையதை விலக்கி புதியதை வைத்துப் பூஜை செய்ய வேண்டிய நேரம் பகல் 11.00 – 12.00.

பொங்கல் பண்டிகை

தை மாதம் 01ந் தேதி (15.01.2024) திங்கட்கிழமை

நிறைய மழையைப் பொழிய வைத்து பூமியின் செழிப்புக்குக் காரணமான இந்திரன், பயிர் நன்கு தானியங்களை விளைவிக்க காரணமான சூரியன், இந்திரனுடைய சகோதரன் உபேந்திரன் இவர்களை முன்னிட்டு நடத்தப்படும் பண்டிகை.

கூடத்தில் புதுப்பானை வைத்து புது நெல் அரிசி, புது வெல்லம், நெய் இவைகளைக் கொண்டு சர்க்கரைப் பொங்கல் செய்து பொங்கி வரும்போது 'பொங்கலோ பொங்கல்' என்று கூவி மேலே குறிப்பிட்ட மூன்று தேவர்களுக்கும் படையல் வைத்து வணங்கும் பண்டிகை. பொங்கல் வைக்க 3 அல்லது 1 பானை வைத்துப் பொங்கல் செய்யலாம்.

பொங்கல் வைக்க வேண்டிய நேரம்
காலை 06.00 – 07.30

மாட்டுப் பொங்கல்

தை மாதம் 02ந் தேதி (16.01.2024) செவ்வாய்க்கிழமை

இன்று பசுமாடுகளுக்குக் குளிப்பாட்டி அலங்கரித்து நமக்காக உழைத்த பசுக்களுக்கு நன்றி செலுத்த வேண்டிய நாள். பசுமாடு இல்லாதவர்கள் பசுமாடுடன் கூடிய கிருஷ்ணரை வழிபடலாம்.

மாட்டுப் பொங்கல் கொண்டாட வேண்டிய நேரம் :
பகல் 11.00 – 12.00
மாலை 05.16 – 06.16

ரத சப்தமி விரதம்

மாசி மாதம் 04ந் தேதி (16.02.2024) வெள்ளிக்கிழமை

ரத சப்தமியன்று அருணோதய காலத்தில் (விடியற்காலை) குளித்து சூரிய உதயத்தில் சூரியனைத் தரிசனம் செய்து சூரிய நாராயணர் படம் வைத்து எருக்கு இலை கொண்டு பூஜை செய்து மதியம் சூரியனின் 7 கிரணங்களை மனதில் வைத்து 7 வகை உணவுகளால் படையல் செய்து விரதத்தை முடித்தால் 7 ஜென்மங்கள் வரை தம்பதிகள் மிகுந்த தனத்தையும் அநேக யோகமுள்ள புத்திரர்களையும் அடைய முடியும் என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது.

அனங்க திரயோதசி – மார்கழி மாதம் 08ந் தேதி (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை

வஸந்த பஞ்சமி – மாசி மாதம் 02ந் தேதி (14.02.2024) புதன்கிழமை

ஸ்ரீ பஞ்சமி – பங்குனி மாதம் 31ந் தேதி (13.04.2024) சனிக்கிழமை

இந்த மூன்று நாட்களிலும் விஷ்ணுபூஜையும், பிராம்மண போஜனமும் செய்ய வேண்டும். மேலும் அன்றைய தினம் லட்சுமி தேவியை குந்த புஷ்பங் களில் அர்ச்சனை செய்தால் ஐஸ்வர்யம் பெருகும்.

இந்த தினத்தில் ரதியையும் மன்மதனையும் பூஜை செய்வதால் தம்பதிகள் ஆயுள் முழுவதும் சந்தோஷமாக இருப்பர் என்று புராணங்கள் கூறுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காருடையான் நோன்பு (காருடையான் – கருப்பு நிறமுள்ள எமன்)

பங்குனி மாதம் 01 ந் தேதி (14.03.2024) வியாழக்கிழமை
நோன்பு நேரம் பகல் 11.30 - 12.30

முன் காலத்தில் அசுவபதி மகாராஜாவின் குமாரி சாவித்திரி என்ற பெண் குறைந்த ஆயுளை உடைய சத்தியவான் என்பவரை விவாகம் செய்து கொண்டாள். ஒரு நாள் காட்டிலிருக்கும் சமயத்தில் சத்தியவானுடைய உயிரை யமன் பாசக்கயிற்றால் அபகரிக்கும்போது காட்டில் இருக்கும் தானியங்களைக் கொண்டு, துவரையும் கலந்து துவரைக் குச்சிகளால் வேகவைத்து கொழுக் கட்டைகள் செய்து சரடு கட்டிக் கொண்டு யமனிடமிருந்து தன் கணவனை மீட்டாள். அந்தத் தினம் மாசி மாத முடிவில் ஸௌமங்கல்ய அபிவிருத்திக்காக கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீ ராமநவமி விரதம்

சித்திரை மாதம் 16 ந் தேதி (29.04.2023) சனிக்கிழமை – ஸ்ரீரங்கம் ஸ்ரீராமநவமி
இவ்வருடம் சைத்ர சுத்த பஞ்சமி கிடையாது.

இன்று உபவாஸத்துடன் விரதம் அனுஷ்டிப்பது ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பதற்கு சமமாகும். இந்த விரதம் அனுஷ்டிப்பதால் எல்லா வித பாபங்களும் நீங்கும். அன்று உயர்ந்த குணமுள்ள ஸ்ரீராமபிரானைத் தொழும் பிராம்மணருக்கு வெள்ளை வஸ்திரம் கொடுத்து அவருடன் மதியம்.

"ஸ்ரீராம ராம ராமேதி
ரமே ராமே மனோரமே
ஸஹஸ்ர நாம தத்துல்யம்
ராம நாம வராணனே"
"ஸ்ரீராம ஜெய ராம ஜெயஜெய ராம"

– என்னும் மந்திரம் சொல்லி ஸ்ரீராமபிரானை ஆராதனை செய்து பலவித பழவகைகளுடன் அன்னங்களைப் படைத்து அதிதி (விருந்தினர்) போஜனம் செய்வித்துத் தானும் போஜனம் செய்தால் சகல நன்மைகளும் பெறலாம். அன்று இரவு வெறும் தரையில் படுக்க வேண்டும்.

கேதாரேஸ்வர விரதம்

புரட்டாசி 06 (23.09.2023) சனிக்கிழமை முதல்
புரட்டாசி 26 (13.10.2023) வெள்ளிக்கிழமை வரை

21 நாட்கள் வீட்டில் மஞ்சளில் சிவலிங்கம் செய்து தினசரி வில்வத்தால் அர்ச்சனை செய்தால் செல்வம் பெருகும். சகல பாவங்களும் விலகும். வீட்டில் திருமணம் நடக்கும்.

கோ (பசு) பூஜை செய்ய

புரட்டாசி 28 (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை
ஐப்பசி 23 (09.11.2023) வியாழக்கிழமை
ஐப்பசி 28 (14.11.2023) செவ்வாய்க்கிழமை

இந்நாட்களிலும் அமாவாசை தினங்களிலும் பசுக்களுக்கு பூஜை செய்யவும். அகத்திக் கீரை கொடுக்கவும். அபரிமிதமான நல்ல பலன்கள் ஏற்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கால பைரவருக்கும் சிவபெருமானுக்கும் உகந்த நாட்கள் (தேய்பிறை - அஷ்டமி)

அஷ்டமி நாள்	அஷ்டமியின் பெயர்	பூஜை பலன்கள்
(இவ்வருடம் சைத்ர சுத்த அஷ்டமி கிடையாது)	சனாதனாஷ்டமி	நவக்கிரக தோஷம் விலகும். ஏழ்மை விலகும்.
சித்திரை 29 (12.05.2023) வெள்ளிக்கிழமை	சதாசிவாஷ்டமி	மனக்குழப்பங்கள் தீரும். தம்பதிகளுக்குள் ஒற்றுமை நிலவும்.
வைகாசி 27 (10.06.2023) சனிக்கிழமை முதல் வைகாசி 28 (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை வரை	பகவதாஷ்டமி	கடன் சுமை தீரும். அடியார்களுக்குச் செய்த அபவாதங்கள் நீங்கும்.
ஆனி 25 (10.07.2023) திங்கட்கிழமை	நீலகண்டாஷ்டமி	கல்வியில் மேன்மை ஏற்படும். சகல துறைகளிலும் வெற்றி ஏற்படும்.
ஆடி 23 (08.08.2023) செவ்வாய்க்கிழமை	அதிக ஸ்தானு அஷ்டமி	சகல செல்வங்களும் கிடைக்கும்.
ஆவணி 20 (06.09.2023) புதன்கிழமை மாலை முதல் ஆவணி 21 (07.09.2023) வியாழக்கிழமை மாலை வரை	ஸ்தானு அஷ்டமி	லட்சுமி கடாக்ஷம் ஏற்படும். விஷ பயம் விலகும்.
புரட்டாசி 19 (06.10.2023) வெள்ளிக்கிழமை	சம்புகாஷ்டமி	ஆயுள் விருத்தி ஏற்படும். தாய், தந்தையர்க்கு செய்த அபவாதங்கள் விலகும்.
ஐப்பசி 19 (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை	ஈஸ்வராஷ்டமி	சகோதர பகை நீங்கும். கைலாச பதவி கிடைக்கும்.
கார்த்திகை 19 (05.12.2023) செவ்வாய்க்கிழமை	ருத்ராஷ்டமி, காலபைரவாஷ்டமி	தனவரவு உண்டாகும். கோபத்தால் செய்த பாபங்கள் விலகும்.
மார்கழி 19 (04.01.2024) வியாழக்கிழமை	சங்கராஷ்டமி	தொழில் விருத்தி ஏற்படும். தொழில் முறையில் செய்த பாபங்கள் விலகும்.
தை 19 (02.02.2024) வெள்ளிக்கிழமை மாலை முதல் தை 20 (03.02.2024) சனிக்கிழமை மாலை வரை	தேவதேவாஷ்டமி	மன பயம் விலகும். உயர்பதவி கிடைக்கும்.
மாசி 20 (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை	மகேஷ்வராஷ்டமி	போட்டிகளில் வெற்றி, தொழில் துறையில் புது யுக்தி, முன்னேற்றம் ஏற்படும்.
பங்குனி 20 (02.04.2024) செவ்வாய்க்கிழமை	திரியம்பகாஷ்டமி	திருமணத் தடை விலகும். யமபயம் நீங்கி ஆயுள் விருத்தி ஏற்படும்.

இந்நாட்களில் காலையில் சிவபெருமானையும் மாலையில் சூரிய அஸ்மனத்தில் பைரவரையும் தரிசனம் செய்து வழிபட்டால் மேற்கூறிய நன்மைகள் ஏற்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மஹாலட்சுமிக்கு உகந்த நாட்கள்

புரட்டாசி 05 (22.09.2023) வெள்ளி முதல்
புரட்டாசி 19 (06.10.2023) வெள்ளி வரை – 15 நாட்கள் | மஹாலட்சுமி விரதம்

– மஹாலட்சுமிக்கு கலசம் வைத்து பூஜை செய்து பகல் வரை விரதம் இருந்து பகலில் இனிப்புடன் அன்ன நைவேத்யம் செய்து தினசரி குறைந்தது 1 சுமங்கலிக்கு விருந்து கொடுத்து தட்டுடன் துணி வகைகள், மஞ்சள், குங்குமம், வளையல், புஷ்பம், மஞ்சள் கயிறு, சந்தனம் ஆகியவற்றை சமர்ப்பித்து சுமங்கலி பூஜை செய்தால் மஹாலட்சுமி கடாக்ஷத்தால் கல்வி, புகழ், வலிமை, வெற்றி, நெல், நன்மக்கள், பொன், நல்லூழ் அறிவு, அழகு, நுகர்ச்சி, வாழ்நாள் இளமை, பொறுமை, துணிவு, நோயின்மை ஆகிய 16 பேறுகளையும் குறைவறப் பெறலாம். (சகல விஷயங்களிலும் வெற்றிபெற்று 16 பேறு பெற்றிட இதைவிடச் சிறந்த விரதம் கிடையாது).

கார்த்திகை 27 (13.12.2023) புதன் முதல்
மார்கழி 07 (23.12.2023) சனி வரை – 11 நாட்கள் | லக்ஷ்மி விரதம்

(தினசரி லக்ஷ்மி பூஜை காலையிலும் மாலையிலும் செய்ய இழந்த செல்வமும் தொழிலும் கிடைக்கும்)

ஐப்பசி 28 (14.11.2023) செவ்வாய் முதல்
கார்த்திகை 26 (12.12.2023) செவ்வாய் வரை – 29 நாட்கள் | அகண்ட தீப பூஜை

(அகண்ட தீப்பூஜை எப்போதும் எரியும்படி (29 நாட்களும் வீட்டில் அணையா தீபம் வைக்க வேண்டும். தினசரி காலை, மாலை லக்ஷ்மி பூஜை செய்ய வேண்டும். மஹாலட்சுமியின் பேரருளுடன் புதுத்தொழில் அமையும். தொழில் வளர்ச்சி ஏற்படும். திடீர் தனப் பிராப்தி ஏற்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். இது அனைவரும் அனுஷ்டிக்க வேண்டிய முக்கியமான பூஜையாகும்)

ஐப்பசி 09 (26.10.2023) வியாழன் முதல்
கார்த்திகை 08 (24.11.2023) வெள்ளி வரை – 30 நாட்கள் | மதன துவாதசி விரதம்

(தினசரி துளசி லக்ஷ்மியையும் கிருஷ்ண பகவானையும் வழிபட வேண்டும். பாபங்கள் நீங்கும். பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். தீர்க்க சுமங்கலியாக இருப்பர்).

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதர மஹாலட்சுமிக்கு உகந்த விரத நாட்கள்

ஆனி 05 (20.06.2023) செவ்வாய்	– அமிர்தலட்சுமி விரதம் (நோய் நொடிகள் நீங்கி ஆரோக்யம் ஏற்படும்)
ஆடி 06 (22.07.2023) சனி	– ஸ்ரீஆண்டாள் திருவாடிப்பூரம் (பெண்களுக்குத் திருமண பாக்கியம் கிடைக்கும்)
ஆவணி 08 (25.08.2023) வெள்ளி	– வரலட்சுமி விரதம் (பெண்கள் சகல சௌபாக்யங்களுடன் தீர்க்க சுமங்கலியாக இருப்பர்)
புரட்டாசி 07 (24.09.2023) ஞாயிறு	– கெஜலட்சுமி விரதம் (அரசாங்க ஆதரவுடன் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும்)
ஐப்பசி 11 (28.10.2023) சனி	– கௌமதி ஜாகர விரதம் (பௌர்நமி இரவு முழுவதும் லட்சுமி பூஜை செய்ய லட்சுமி தேவி வீடுதேடி வருவாள்)
ஐப்பசி 19 (05.11.2023) ஞாயிறு	– ராதா ஜெயந்தி (ஹரிபக்தி ஏற்படும்)
ஐப்பசி 26 (12.11.2023) ஞாயிறு	– லக்ஷ்மி குபேர பூஜை (லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும்)
கார்த்திகை 08 (24.11.2023) வெள்ளி	– துளசி விவாகம் (திருமணத் தடைகள் நீங்கி பெண்களுக்கு விரைவில் திருமண பாக்கியம் ஏற்படும்)
கார்த்திகை 26 (12.12.2023) செவ்வாய்	– லக்ஷ்மி பிரபோதன தினம் (பழைய பாக்கிகள் வசூலாகும்)
மாசி 02 (14.02.2024) புதன்	– வஸந்த பஞ்சமி (நிலையான சொத்துக்கள் கிடைக்கும்)
பங்குனி 12 (25.03.2024) திங்கள்	– பங்குனி உத்திரம் (லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும். தம்பதிகளுக்குள் அன்னியோன்யம் ஏற்படும்)
பங்குனி 31 (13.04.2024) சனி	– ஸ்ரீலக்ஷ்மி பஞ்சமி (லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும். நிலையான சொத்துக்கள் கிடைக்கும்)

இந்நாட்களில் வீட்டில் கலசம் வைத்து லட்சுமி பூஜை செய்யவேண்டும். குறைந்த பட்சம் வீட்டில் லட்சுமி படத்திற்கும் பெருமாள் கோவில் சென்று தாயாருக்கு விளக்கு வைத்து வர வேண்டும். மேலும், வீட்டில் லக்ஷ்மி கடக்ஷம் பெற சகலவிதமான லக்ஷ்மி ஸ்தோத்திரங்களும் மந்திரங்களும் அடங்கிய 'பணமழை பொழியச் செய்யும் சைவ வைணவ ஸ்தோத்திரங்கள்' வாங்கிப் பயனடையுங்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லக்ஷ்மி நரசிம்மருக்கு உகந்த நாட்கள்

வளர்பிறை சதுர்த்தசி
(ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் அவதரித்த திதி)

சித்திரை 21 (04.05.2023) வியாழக்கிழமை
வைகாசி 19 (02.06.2023) வெள்ளிக்கிழமை – ஸ்மார்த்தர்களுக்கு
வைகாசி 20 (03.06.2023) சனிக்கிழமை – ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு
ஆனி 17 (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை
ஆடி 15 (31.07.2023) திங்கட்கிழமை
ஆவணி 12 (29.08.2023) செவ்வாய்க்கிழமை
புரட்டாசி 11 (28.09.2023) வியாழக்கிழமை
ஐப்பசி 10 (27.10.2023) வெள்ளிக்கிழமை
கார்த்திகை 10 (26.11.2023) ஞாயிற்றுக்கிழமை
மார்கழி 09 (25.12.2023) திங்கட்கிழமை
தை 10 (24.01.2024) புதன்கிழமை
மாசி 11 (23.02.2024) வெள்ளிக்கிழமை
பங்குனி 10 (23.03.2024) சனிக்கிழமை

சுவாதி
(ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் அவதரித்த நட்சத்திரம்)

சித்திரை 22 (05.05.2023) வெள்ளிக்கிழமை
வைகாசி 18 (01.06.2023) வியாழக்கிழமை
ஆனி 14 (29.06.2023) வியாழக்கிழமை
ஆடி 10 (26.07.2023) புதன்கிழமை
ஆவணி 05 (22.08.2023) செவ்வாய்க்கிழமை
புரட்டாசி 02 (19.09.2023) செவ்வாய்க்கிழமை
புரட்டாசி 29 (16.10.2023) திங்கட்கிழமை
ஐப்பசி 26 (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை
கார்த்திகை 23 (09.12.2023) சனிக்கிழமை
மார்கழி 21 (06.01.2024) சனிக்கிழமை
தை 19 (02.02.2024) வெள்ளிக்கிழமை
மாசி 17 (29.02.2024) வியாழக்கிழமை
பங்குனி 15 (28.03.2024) வியாழக்கிழமை

பௌமாஸ்வினி

(செவ்வாய் தோஷத்தைப் போக்குகின்ற, பூமி லாபம் தருகின்ற, இரத்த நோயைப் போக்குகின்ற ஸ்ரீநரசிம்மருக்கு உகந்த நாட்கள்)

வைகாசி 30 (13.06.2023) செவ்வாய்க்கிழமை (மாலை)
ஆனி 26 (11.07.2023) செவ்வாய்க்கிழமை
பங்குனி 27 (09.04.2024) செவ்வாய்க்கிழமை

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் தன்பக்தன் பிரஹலாதன், தேவர்கள், முனிவர்கள் மற்றும் நல்லோர்கள் நன்மை பெற வைகாசி மாதம் வளர்பிறை சதுர்தசி திதியில் பிரதோஷ காலத்தில் ஹிரண்யனை வதம் செய்வதற்காக பிரஹலாதன் காட்டிய தூணிலிருந்து வெளிப்பட்டார். இவர் பிறந்தது வாயு பகவானின் அபிமான நட்சத்திரமான சுவாதி நட்சத்திரம் 'ஜ்வலந்தம்' என்னும் அடைமொழி நரசிம்மருக்கும் லக்ஷ்மி தேவிக்கும் மட்டுமே பொருந்தும். ஜ்வலந்தம் என்றால் நினைத்த நேரத்தில் பிரகாசமான ஒளியுடன் மின்சாரம் போல் பிரகாசமாகத் தோன்றுபவர் என்று பொருள்.

அவ்வாறு பெருமை கொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை அவரது அவதார திதியான வளர்பிறை சதுர்தசியில் பிரதோஷ காலமான மாலை நேரத்திலும் அவதார திதியான சுவாதி நட்சத்திரத்தில் பகல் நேரத்திலும் வணங்குவதற்கும் பிரார்த்தனைகள் செய்வதற்கும் முன்ஜென்ம ஊழ்வினையால் ஏற்பட்ட பிணியிலிருந்து விடுபடுவதற்கும் அபிஷேகங்கள், ஆராதனைகள் செய்து ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மருக்கு உகந்த ஸ்தோத்திரமான 32 அட்க்ஷங்கள் கொண்ட மூல மந்திரங்கள் 32 முறை ஜெபித்து பயன் பெறுவதற்கும் ருணவிமோசன ஸ்தோத்திரம் இருமுறை பாராயணம் செய்து பிறவிக்கடன், பணக்கடன் மற்றும் நோய்நொடிகள் தீர்ப்பதற்கும் ஏற்ற தினங்களாகும்.

மேலும் ஜோதிட சாஸ்திரப்படி செவ்வாய் தோஷ நிவர்த்திக்கான கடவுள் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர் என்று போற்றப்படுகிறார். மேலும் செவ்வாய்க்கிழமையன்று செவ்வாயின் ஆட்சி வீடாகிய மேஷ ராசிக்கு சந்திரன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செல்லும் முதல் நட்சத்திரமான அசுவனி நட்சத்திரமும் கூடுவது மிகவும் சிறப்பு. இந்த நாளை பௌமாஸ்வினி நாட்கள் என்று கூறுவர். 'பௌமம்' என்றால் செவ்வாய் என்று பொருள். பௌமாஸ்வினி என்றால் செவ்வாய்க்கிழமை அசுவனி நட்சத்திரம் கூடிய நாள் என்று பொருள்.

இப்படிப்பட்ட நாளில் லக்ஷ்மி நரசிம்மரை வழிபட்டால் செவ்வாய் தோஷம், விபத்து தோஷம், ரத்த சம்மந்தமான நோய்கள் விலகி நல்ல உடல் ஆரோக்கியமும் கடன் தொல்லைகள் நீங்கி நல்ல தனலாபமும் பூமி வாங்கும் யோகமும் ஏற்படும். இதன் பொருட்டு வளர்பிறை சதுர்தசி திதி கூடிய நாளும். சுவாதி நட்சத்திரம் உள்ள நாளும் பௌமாஸ்வினி நாளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கீழே லக்ஷ்மி நரசிம்மரின் 32 எழுத்து மூலமந்திரமும் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரின் காயத்ரி மந்திரமும் ருணவிமோசன மந்திரமும் கொடுக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டு சக துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற்று ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரின் கிருபையால் சகல துறைகளிலும் முன்னேற்றம் பெற்று வளமான வாழ்க்கையைப் பெறவும்.

ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர் மூல மந்த்ரம்

ஓம் உக்ரம் வீரம் மஹா விஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம்
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும் ம்ருத்யும் நமாம்யஹம் ||

ருணவிமோசன ஸ்தோத்திரம்

1. தேவதாகார்ய ஸித்யர்த்தம் ஸபாஸ்தம்ப ஸமுத்பவம்|
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

2. லக்ஷ்ம்யாலிங்கித வாமாங்கம் பக்தாநாம் வரதாயகம் |
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

3. ஆந்த்ரமாலாதரம் ஶங்க சக்ராப்ஜாயுத தாரிணம் |
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

4. ஸ்மரணாத் ஸர்வ பாபக்நம் கத்ரூஜ விஷநாஶநம் |
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

5. ஸிம்ஹநாதேந மஹதா திக்தந்தி பயநாஶநம்|
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

6. ப்ரஹ்லாத வரதம் ஸ்ரீஶம் தைத்யேஶ்வர விதாரிணம் |
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

7. க்ரூரக்ரஹை : பீடிதாநாம் பக்தாநா மபயப்ரதம் |
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

8. வேதவேதாந்த யஜ்ஞேஶம் ப்ரஹ்மருத்ராதிவந்திதம் |
ஸ்ரீந்ருஸிம்ஹம் மஹாவீரம் நமாமி ருணமுக்தயே||

9. ய இதம் படதே நித்யம் ருணமோசந ஸம்ஜ்ஞிதம் |
அந்ருணீ ஜாயதே ஸத்யோ தநம் ஶீக்ரமவாப்நுயாத் ||

இதி ஸ்ரீ ந்ருஸிம்ஹபுராணே ருணவிமோசந ந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சோபகிருது வருஷத்திய சுபமுகூர்த்த நாட்கள் மற்றும் பண்டிகை விசேஷங்கள்

அம்பாளுக்கு உகந்த நாட்கள்

சித்திரை 10 (23.04.2023) ஞாயிறு	–	வார்த்தா கௌரி விரதம் (திருமணத் தடை நீங்கும்)
சித்திரை 11 (24.04.2023) திங்கள்	–	லாவண்ய கௌரி விரதம் (பெண்கள் அழகுடன் தீர்க்க சுமங்கலியாக இருப்பர்)
சித்திரை 22 (05.05.2023) வெள்ளி	–	அர்த்தநாரீஸ்வர விரதம் (தம்பதிகளுக்குள் அன்யோன்யம் ஏற்படும். பிரிந்த தம்பதியர் சேருவர்)
சித்திரை 22 (05.05.2023) வெள்ளி	–	சம்பத் கௌரி விரதம் (வீட்டில் செல்வச் செழிப்பு ஏற்படும்)
வைகாசி 06 (20.05.2023) சனி	–	புன்னாக கௌரி விரதம் (வீட்டில் உள்ளவர்களுக்கு நோய் நொடிகள் தீரும்)
வைகாசி 08 (22.05.2023) திங்கள்	–	ரம்பா திருதியை, கதலி கௌரி விரதம் (பெண்களுக்கு அழகு வசீகரம் கூடும். விரைவில் திருமண பாக்கியம் ஏற்படும்)
வைகாசி 20 (03.06.2023) சனி	–	வடசாவித்திரி விரதம் (பெண்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பர்)
ஆனி 08 (23.06.2023) வெள்ளி	–	சமீ கௌரி விரதம் (தாயும் சேயும் நலமாக இருப்பர்)
ஆனி 18 (03.07.2023) திங்கள்	–	கோகிலா விரதம் (குரல் வளமை ஏற்பட்டுப் பெயரும் புகழும் கிடைக்கும்)
ஆவணி 02 (19.08.2023) சனி	–	ஸ்வர்ண கௌரி விரதம் (தங்கம் வாங்கும் யோகம் ஏற்படும். பெண்கள் தீர்க்க சுமங்கலியாயிருப்பர்)
ஆவணி 04 (21.08.2023) திங்கள்	–	பணி கௌரி விரதம் (நோய் நொடிகள் தீரும். தனக்கும் கணவனுக்கும் தொழில் விருத்தி ஏற்படும்)
ஆவணி 06 (23.08.2023) புதன்	–	சீதளா விரதம் (உடற்பிணிகள் தீரும். ஆரோக்யம், ஆயுள் பெருகும்)
புரட்டாசி 01 (18.09.2023) திங்கள்	–	ஹரிதாளிகா கௌரி விரதம் (நோய்கள் தீரும். ஆரோக்யம் ஏற்படும். பெண்கள் தீர்க்க சுமங்கலியாயிருப்பர். உயிருக்கு பாதுகாப்பு கிடைக்கும்)
புரட்டாசி 07 (24.09.2023) ஞாயிறு	–	அதுக்க நவமி விரதம் (பலவகையிலும் ஏற்பட்ட துக்கங்கள் விலகும்)
புரட்டாசி 12 (29.09.2023) வெள்ளி	–	உமா மகேஸ்வர விரதம் (பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். தம்பதிகள் ஒற்றுமையாக இருப்பர்)
ஐப்பசி 14 (31.10.2023) செவ்வாய்	–	சந்த்ரோதய கௌரி விரதம் (திருமணத் தடைகள் நீங்கும். ஆயுள் பெருகும். மன அமைதி ஏற்படும்)
ஐப்பசி 27 (13.11.2023) திங்கள்	–	கேதார கௌரி விரதம் (லட்சுமி கடாக்ஷம் பெருகும். பெண்கள், ஆண்கள் நோயின்றி வாழ்வர்)
கார்த்திகை 28 (14.12.2023) வியாழன்	–	திந்த்ரிணீ கௌரி விரதம் (சனி தோஷம், நவக்கிரக தோஷம் விலகும்)
கார்த்திகை 29 (15.12.2023) வெள்ளி	–	அபியோக திருதியை (தொழில் துறை வளர்ச்சி, திடீர் தனலாபம் ஏற்படும்)
பங்குனி 01 (14.03.2024) வியாழன்	–	சம்பத் கௌரி விரதம் (சகல விதத்திலும் செல்வாக்குடன் பெண்கள் தீர்க்க சுமங்கலியாயிருப்பர்)
பங்குனி 29 (11.04.2024) வியாழன்	–	சௌபாக்கிய கௌரி விரதம் (சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்வர்)

இந்நாட்களில் வீட்டில் கலசம் வைத்து அம்பாளை வழிபட மேற்கூறிய சுபங்கள் யாவும் நிகழும். குறைந்தபட்சம் அன்றைய தினம் வீட்டில் அம்பாள் படத்திற்கும் கோவிலுக்கும் சென்று அம்பாளுக்கு விளக்கு வைத்து வர வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சமஷ்டி உபநயன ப்ரம்மோபதேச விழா 25-05-2022, புதன்கிழமை

கணபதி ஹோமம், கொடியேற்றுதல் பொதுக் குழு மற்றும் பஞ்சாங்கம் வெளியீட்டு விழா - 2022

புதுச்சேரி ப்ராம்மண சேவா பவுண்டேஷன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திரு.S.செல்வ கணபதி M.P மற்றும் மாங்காடு, திரு. G. பாலாஜி ஆத்ரேயா அவர்களை வரவேற்று வேத கோஷம் மற்றும் வாழ்த்துரை



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திரு. S. செல்வ கணபதி M.P, திரு. V.P. ராமலிங்கம் M.L.A, மாங்காடு, திரு. G பாலாஜி ஆத்ரேயா

மற்றும் திரு. S. சதாசிவம் செங்குந்தர் ஆகியோர்கள் கலந்து கொண்டு விழாவினை கௌரவித்தார்கள்

புதுச்சேரி பிராமண சேவா பவுண்டேஷன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிறப்பு விருந்தினர்களுடன் இணைந்து திருமதி. ஜெயந்தி கோபாலகிருஷ்ணன்
மூத்த குடிமக்கள் மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்கள்









CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

pbsf பொதுக் குழுவில் பஞ்சாங்கம் மற்றும் பரிசுகள் வழங்கிய தருணம்



புதுச்சேரி பிராமண சேவா பவுண்டேஷன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

pbsf மூன்றாம் ஆண்டு ஆவணி அவிட்டம் - 2022

மாண்புமிகு அமைச்சர் ஏ.கே.சாய் ஜே. சரவணக்குமார், திரு.T. நடராஜன் (ராம் சில்க்ஸ் உரிமையாளர்) ஆகியோர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உ

கீழ்புத்துப்பட்டு ஸ்ரீ ஐய்யனாரப்பன் துணை

சிவா பிரிண்ட்ஸ்

Shiva Prints

MULTICOLOR HD DIGITAL PRINT

Logo | Notice | Brochure | Marriage Invitation | Wrapper | Certificate | Newsletter
Flex | Catalogue | Paper Add | Name Board | Pamphlet | Advertisement | Souvenir
Poster | CD | Sticker Dangler | Booklet Sticker | Tag | Visiting Card | Letter Head
Envelope | Cup Print | ID Card | Whatsapp Invite | Screen Print

251, 1st Floor, Brindavanam, (Opp. State Bank),
Kamaraj Salai, Puducherry - 605 013.
0413 - 4202233, 99942 33322, 76392 22578
shivaprints1947@gmail.com

87,1st Floor, (Evergreen Departmental Store Upstair),
Chinnayanpet Main Road, Thendral Nagar, New Saram,
Pondicherry - 605 013.
0413 - 2962322, 99942 33322, 96290 24999
shivaagraphics1947@gmail.com

Follow us

shivaprints07

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,